**பொருள் எண்.1**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான 4 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 2018-19-ஆம் ஆண்டு பணிக்கு அமர்த்துவதற்கான உத்தேச செலவினம் ரூ.5,50,000/-க்கு மன்ற ஒப்புதல் பெற்று பணிக்கு அமர்த்தப்பட்டு, ஓராண்டு அனுமதி காலம் 31.03.2019-வுடன் முடிவடைவதால், குடிநீர் பணிகளின் மேற்படி பணியாளர்களின் அவசியம் கருதி, 2018-19-ம் ஆண்டிற்கு பொதுப்பணித்துறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 356 நாட்களுக்கு (ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2020 வரை) 4 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்காகவும் உத்தேச செலவு தொகை ரூ.5,70,000/-க்கும் மேற்படி செலவினத்தை குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.174-1/2019/இ1

**தீர்மானம் எண்.1995 அங்கீகரிக்கப்பட்டன.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சியில் 26.01.2019 அன்று நடைபெற்ற குடியரசு தினவிழா நிகழ்ச்சிக்காக புதிய மூவர்ணக்கொடி, தோரணங்கள், மைக்செட் மற்றும் இதர செலவுகள் மேற்கொண்ட வகையில் ரூ.2930/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1829/2015/எச்1

**தீர்மானம் எண்.1996 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.3**

இந்நகராட்சி கண்காணிப்பு வாகனம் TN 75 K 6526 –ல் கீழ்காணும் பழுதுகள் ஏற்பட்டுள்ளது.

1. இன்ஜின் ஆயில் மாற்றுதல்
2. ஆயில் பில்ட்டர் மாற்றுதல்
3. டீசல் பில்ட்டர்கள் மாற்றுதல்
4. வீல் அலாய்மென்ட் பேலான்சிங்
5. டயர்கள் நான்கு பறமும் ரோட்டேசன் செய்தல்
6. வைபர் டேங்க் மோட்டார் மாற்றுதல்

மேற்காணும் பழுதுகளை சரிசெய்யும் பொருட்டு, M/s.Kodai Cars Pvt ltd, Nagercoil, நிறுவனத்திடமிருந்து ரூ.7952/- க்கான விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. எனவே அலுவலக பணிகளில் மேற்படி வாகனத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு, M/s.Kodai Cars Pvt ltd, Nagercoil, நிறுவனத்தின் மூலம் வாகனத்தை பழுது நீக்கம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.7952/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7057/1/2011/எச்1

**தீர்மானம் எண்.1997 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 24 வார்டுகளுக்கும் தெரு தொடர்பாக Satellite Map வரைந்த வகையில் ரூ.4180/-ம் Satellite Map -ஐ கலர் பிரிண்ட் எடுத்த வகையில் ரூ.944/-ம் மேலும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி ஆகிய வரி இனங்களை அலுவலகத்தில் செலுத்த ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்வதற்கு Audio எடுத்த வகையில் ரூ.1500/- ம் சேர்த்து மொத்தம் ரூ.6624/- திரு.தமிழ்செல்வன் வருவாய் உதவியாளரால் செலவு செய்யப்பட்டது. மேற்படி தொகையை ரூ.6624/- திரு.தமிழ்செல்வன் உதவியாளருக்கு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4826/1/2012/அ1

**தீர்மானம் எண்.1998 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் 2015-16 முதல் நகராட்சி பணியாளர் மூலம் வசூல் செய்யப்பட்டு வருகின்றது. ஒரு நாளைக்கு வாகனம் ஒன்றுக்கு ரூ.8/- வீதம் நாளொன்றுக்கு ரூ.800/- வசூலாகின்றது. நகராட்சி பணியாளர் சம்பளத்தை கணக்கிடும் போது நகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுகின்றது. இதனால் பேருந்து வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்வதற்குரிய குத்தகையை முன்வைப்புத் தொகையாக

ரூ.25000/-ம், குத்தகை தொகையாக ரூ.72040/-ஜி.எஸ்.டி ரூ.12960/-ம் மொத்தம் சேர்த்து ரூ.85000/-ற்கு குத்தகை விடப்படுகிறது.

மேலும் இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணம் கழிப்பிடம் வசூல் 2018-19 ஆம் ஆண்டிற்கு நகராட்சி பணியாளர் மூலம் வசூல் செய்யப்பட்டு வருகின்றது. ஒரு நாளைக்கு ரூ.200/-ம் மற்றும் ரூ.210/- என வசூல் செய்யப்பட்டு வருகின்றது. நகராட்சி பணியாளர்களின் சம்பளத்தை கணக்கிடும் போது நகராட்சிக்கு இழப்பீடு ஏற்படுகின்றது. மேற்படி குத்தகை இனத்திற்கு முன்வைப்புத் தொகையாக ரூ.15000/-ம், குத்தகை தொகை ரூ.60,000(ஜி.எஸ்.டி உட்பட) திரு.பி.கென்னடி என்பவர் குத்தகைக்கு கேட்டுள்ளார்.

இந்நகராட்சியில் பணியாளர் பற்றாக்குறை உள்ளதால் நகராட்சி நிர்வாக நலனை கருத்தில் கொண்டு திரு.பி.கென்னடி என்பவருக்கு குத்தகை இனங்களை 2019-20-ஆம் ஆண்டிற்கு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.11062/1/2015/அ1

**தீர்மானம் எண்.1999 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 24 வார்டுகளுக்கு பொது சொத்துவரி சீராய்வு வரிவிதிப்புகளை கணிணியில் DTP Operator திரு.ஜானிமோன் என்பவர் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நபருக்கு சொத்துவரி சீராய்வு வரிவிதிப்பு பதிவேற்றம் செய்ததற்கு தினக்கூலியாக ரூ.4000/- வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1249/2018/அ1

**தீர்மானம் எண்.2000 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 24 வார்டுகளுக்கும் பொது சொத்துவரி சீராய்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், மேலும் 2018-19 -ம் ஆண்டு முடிவடைவதற்கு ஒரு மாதங்களும் உள்ள நிலையில் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி

மற்றும் கடைகளுக்கான வாடகை அலுவலகத்தில் செலுத்த ஒலிபெருக்கி மூலம் 2019 பிப்ரவரி 15 முதல் 2019 மார்ச் முடிய 20 நாட்கள் விளம்பரம் செய்ய உத்தேச செலவு ரூ.40000/- வழங்க மன்ற அங்கீகாராம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4826/2012/அ1

**தீர்மானம் எண்.2001 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.8**

இந்நகராட்சிக்குட்பட்ட களிமார் முண்டன்பிலாவடிவிளை குறுக்கு சாலை மழை வெள்ளத்தால் சேதமடைந்து, குண்டும், குழியுமாக காணப்படுவதால், போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மிகுந்த சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே பொது நலன் கருதி மேற்படி பகுதியில் பேவர் பிளாக் தளம் அமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2,00,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1822/2018/இ1

**தீர்மானம் எண்.2002 அங்கீகரிக்கப்பட்டன**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட நரிக்கல் புதிதாக லேஅவுட் போடப்பட்ட இடத்தில், முள்வேலி, பெயர் பலகை மற்றும் நுழைவு வாயில் அமைத்தல் பணிகளை ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத் தீர்மானம் எண்.1921 நாள் 31.10.2018-ன் படி ஒப்புதல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ள 27.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மதிப்பீட்டை விட அதிக விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டதால், விலை விகிதத்தை குறைப்பது தொடர்பாக (Negotiation) ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், கீழ்காணும் விவரப்படி பணியினை மேற்கொள்ள இசைவு தெரிவிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | திரு.Sஜாண்றோஸ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01 %குறைவு |
| 2 | திரு.Cசெல்லநாடார், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 95.41% அதிகம் |

மேற்காணும் இரண்டு விலை விகிதங்களில் திரு.Sஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01 %குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1451/2018/இ1

## தீர்மானம் எண்.2003 அங்கீகரிக்கப்பட்டன

### பொருள் எண்.1

இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-19-ன் கீழ், ரூ.21.60 இலட்சம் மதிப்பீட்டில் 12 எண்ணம் மின்கலத்தில் இயங்கும் வாகனங்கள் (12 Nos. of Battery Operated Vehicles) வினியோகம் செய்தல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினபூமி நாளிதழின் 27.01.2019-ம் தேதிய பதிப்பில் பிரசுரம் செய்தல் வகையில் விளம்பர க்கட்டணம் ரூ.11,844/-ஐ வழங்க கேட்டு பட்டியல் எண்.71004 நாள் 27.01.2019 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட பத்திரிக்கை அலுவலகத்திற்கு தற்போது நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், திட்ட நிதி பெறப்பட்ட பின்னர் மேற்படி தொகையினை பொது நிதிக்கு மாற்றம் செய்யவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566-4/2018/இ1

## தீர்மானம் எண்.2004 அங்கீகரிக்கப்பட்டது

### பொருள் எண்.2

குளச்சல் நகராட்சி எல்லகைக்குள் கட்டப்படும் கட்டிடங்கள் மற்றும் அதனை சார்ந்த பிற கூட்டமைப்புகளுக்கும் கட்டிட உரிமம் வழங்குவதற்கு 28.02.2017-ல் நிர்ணயம் செய்யப்பட்ட உரிம கட்டணங்கள் 01.05.2017 முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசாணை நிலை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA) துறை நாள் 04.02.2019 –ன் படி தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019-ன் படி 04.02.2019 முதல் கட்டண விகிதங்கள் மற்றும் மூன்று ஆண்டு அனுமதி காலம் ஐந்து ஆண்டுகளாக மாற்றி அரசாணை வெளியிடப்பட்டுள்ளதால் 04.02.2019 முதல் கட்டண விகிதங்கள் மாற்றம் செய்து நடைமுறைப்படுத்திட அவசியம் எழுந்துள்ளது.

எனவே, 1920-ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் 5-வது சட்டத்தின் பிரிவுகள் 175,176,173,197,199,200,201,204,2017,208,249,250 ஆகியவற்றின் கீழ் கட்டிட உரிமங்கள், உரிம ஆணைகள் அனுமதிகள் மீதான கட்டணங்களின் மாறுதல்கள், இந்நகராட்சியின் நிதி நிலையை அதிகரிக்கும் பொருட்டு,

1. திருத்தப்பட்ட 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 321(2)-ன் படி கீழ்கண்டவாறு உரிமக்கட்டணத்தை மாற்றி அமைக்கவும்.
2. மேலே கூறப்பட்ட செயல்களுக்கு நிர்வாக அதிகாரிகளிடமிருந்து உரிமை ஆணை இல்லாமலும், உரிய கட்டணங்களை செலுத்தாமலும், உரிம ஆணையிலும், துணை

சட்டங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்படாமலும் பயன்படுத்தக்கூடாது என்று அறிவிக்கவும்.

3. மேலே குறிப்பிட்டுள்ள விதிகளின்படி, நடக்காமல் யாரேனும் மேற்படி விதிகளை மீறினால் திருத்தப்பட்ட 1920-ம் ஆண்டின் மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் 308(எ) மற்றும் (பி) பிரிவுகளின்படி தண்டனைக்குள்ளாவார்கள் என்று அறிவிக்கவும், மாற்றி அமைக்கப்பட்ட கட்டணம் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கும் 04.02.2019 முதல் நடைமுறைப்படுத்துவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண்.1621, நாள் 28.02.2017-ல் தேவையான திருத்தங்கள் செய்து திருத்திய கட்டண மற்றும் உரிம கால விவரங்கள் குறிப்பிட்டு மன்ற பொருள் அங்கீகாரத்திற்காக,

| வ. எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920-ன் பிரிவு | கட்டணம் விதிக்கப்படும் தொழில் அல்லது செயல் | அளவு | பழைய விகிதம் ரூ.பை | கால அளவு | தற்போது நிர்ணயிக் கப்பட்டுள் ள கட்டண விகிதம் ரூ.பை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 175,176 | (அ)தனியார் நிலத்தை தெருக்களாகவும் வீட்டு மனைகளாகவும் பிரித்து அங்கீகாரம் பெற அனுமதி கட்டணம் | ஒரு ஏக்கர் மற்றும் அதன் பாகம் | - | ஒரு முறை | 1000.00 |
| | 197 (1) | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் மனை உட்பிரிவு அல்லது மனை ஒருங்கிணைப்பு அங்கீகாரம் பெறுவதற்கு அனுமதி கட்டணம் | ஒரு சதுர மீட்டருக்கு | - | ஒரு முறை | 1.00 |
| 2 | | அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் நிலை உபயோக மாற்றம் செய்து அங்கீகாரம் பெறுவதற்கும், அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதியில் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் நில உபயோக மாற்றம் செய்து அங்கீகாரம் பெறுவதற்கு அனுமதி கட்டணம் | ஒரு மனை மற்றும் அதன் பாகம் | - | ஒரு முறை | 20000.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 197,201,215 | (1)மட்டப்பா கட்டிடம், கான்கிரீட் கூரை கட்டிடம், புதியதாக கட்டுதல், இடித்து திரும்பக் கட்டுதல், கூடுதல் கட்டுதல், மாறுதல் செய்தல் (கட்டுமானம் ஒரு பகுதி/ஒரு பகுதி ஆஸ்பெஸ்டாஸ் தகடு / தகரக் கட்டடமாகவும் , ஒரு பகுதி மட்டப்பா கான்கிரீட் கூரை கட்டடமாகவும் இருப்பின் முழு மட்டப்பா கட்டிடத்திற்குரிய கட்டண விகிதங்கள் அனுசரிக்கப்பட வேண்டும். | | | | |
| | 197,201,2015 | அ)குடியிருப்பு கட்டடங்களுக்கு : | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | | ஐந்து ஆண்டு காலத்திற்கு | |
| | | அ) தரை தளம், தரை கீழ்தளம் | | 200.00 | | 200.00 |
| | | ஆ) முதல் தள கட்டிடம் | | 200.00 | | 200.00 |
| | | இ) இரண்டாம் தள கட்டிடம் | | 200.00 | | 300.00 |
| | | ஈ) மூன்றாம் தள கட்டிடம் | | 200.00 | | 500.00 |
| | | உ) நான்காம் தள கட்டிடம் மற்றும் அதற்கு மேல், | | 200.00 | | 1000.00 |
| | | ஆ)குடியிருப்பு அல்லாத கட்டிங்களுக்கு | | | | 300.00 |
| | | அ)தரை தளம், தரை கீழ்தளம் | | | | 300.00 |
| | | ஆ)முதல் தள கட்டிடம் | | 200.00 | | 400.00 |
| | | இ)இரண்டாம் தள கட்டிடம் | | | | 600.00 |
| | | ஈ)மூன்றாம் தள கட்டிடம் | | | | 1200.00 |
| | | உ)நான்காம் தள கட்டிடம் மற்றும் அதற்கு மேல் | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | | (2)ஓட்டுக்கூரை /சிமெண்ட் தகடு/தகரக்கூரை கட்டிடம் புதியதாக கட்டுதல், இடித்து திரும்பக் கட்டுதல், கூடுதலாக கட்டுதல், மாற்றங்கள் செய்து கட்டுதல் | | | | |
| | | (அ)குடியிருப்பு வகைக்கு | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| | | (ஆ)குடியிருப்பு அல்லாத வகைக்கு | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| 5 | 197,198,200 | மனை அங்கீகரிக்க (3)(i )வீடு கட்டும் மனை அங்கீகரிக்க | | | | |
| | | (a)250 சதுர மீட்டர் வரை பரப்பளவுள்ள மனை | ஏர் ஒன்றுக்கு | 200.00 | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 200.00 |
| | | b) 251 சதுர மீட்டர் பரப்பளவு முதல் 500 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனை | ஏர் ஒன்றுக்கு | 200.00 | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 300.00 |
| | | c) 501 சதுர மீட்டர் பரப்பளவு முதல் 1000 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனை | ஏர் ஒன்றுக்கு | 200.00 | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 500.00 |
| | | d)1000 சதுர மீட்டர் பரப்பளவிற்கு மேல் | ஏர் ஒன்றுக்கு | 200.00 | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 1000.00 |
| | | (i i ) கடை தங்கும் விடுதி, திருமண மண்டபம், மருத்துவமனை, தொழிற்சாலை, திரைப்பட அரங்கு மற்றும் இதர குடியிருப்பு அல்லாத கட்டிடம் | | | | |
| | | (a)250 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனை | ஏர் ஒன்றுக்கு | 200.00 | | 400.00 |
| | | b) 251 சதுர மீட்டர் பரப்பளவு முதல் | ஏர் ஒன்றுக்கு | 200.00 | | 600.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 500 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனை | | | | |
| | | c) 501 சதுர மீட்டர் பரப்பளவு முதல் 1000 சதுர மீட்டர் பரப்பளவுள்ள மனை | ஏர் ஒன்றுக்கு | 200.00 | | 1000.00 |
| | | d)1000 சதுர மீட்டருக்கு மேல் | ஏர் ஒன்றுக்கு | 200.00 | | 2000.00 |
| | | (iii) பூமிக்கு அடியில் எண்ணெய் தொட்டி அமைக்க | ஏர் ஒன்றுக்கு | - | | 2000.00 |
| 6 | 197 | (அ) கட்டிட பொருள் சேமிக்க மற்றும் கட்டடங்களின் இடிபாடுகள் அகற்றுவதற்கு | 100 சதுர அடிக்கு | 200.00 | ஐந்து வருடத்திற்கு | 200.00 |
| | | (ஆ) அனுமதியின்றி கட்டிடம் கட்டியிருந்தால் அபராத கட்டணம் | - | 500 | ஐந்து வருடத்திற்கு | 500.00 |
| | | (இ) கட்டிட உரிமம் வழங்கப்பட்ட அனுமதி காலத்திற்குள் கட்டிடம் கட்டி முடிக்காத பட்சத்தில் கட்டட அனுமதிக் கட்டணத்தொகை பெற்றுக்கொண்டு ஒருமுறை மட்டும் கட்டிட உரிமம் புதுப்பித்து வழங்கப்படும். | | | | |
| 7 | 197 மற்றும் 207 | சர்க்கஸ், சினிமா, நாடகம் கேளிக்கைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் (எளிதில் தீப்பிடிக்காத பொருட்களினால்) அமைக்க | ஒவ்வொரு 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | - | ஒரு வாரம் | 100.00 |
| 8 | 197 மற்றும் 207 | (1) கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு புதியதாக கட்டி, திரும்பக்கட்ட | ஒன்றிற்கு | 500.00 (மூன்று ஆண்டு) | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 500.00 |
| | | (2)மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுவதற்கு பிரதான கட்டடத்திினின்று | ஒன்றிற்கு | - | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 500.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | தனியாக (Detatched over head tank) | | | | |
| | | போர்வெல் அமைத்தல் | ஒன்றிற்கு | - | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 500.00 |
| 9 | 197,201,215 | (1)கழிவறை நச்சுத்தடை தொட்டிகளுடன் கூடியது | ஒன்றிற்கு | 200.00 | " | 200.00 |
| | | (2)குளியலறை இணைந்த கழிவறை | ஒன்றிற்கு | 200.00 | " | 200.00 |
| | | (3)குளியலறை அல்லது கழிவறை | ஒன்றிற்கு | 200.00 | " | 200.00 |
| | | (4)(அ) சுற்றுச் சுவர் 2.4 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டுவதற்கு | 10RM நீளத்திற்கும் அதன் பாகத்திற்கும் | 500.00 (மூன்று ஆண்டிற்கு) | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 500.00 |
| | | (ஆ) சுற்றுச்சுவர் 2.4 மீட்டர் உயரத்திற்கு மிகாமல் கட்டுவதற்கு | 1 RM நீளத்திற்கும் அதன் பாகத்திற்கும் | - (மூன்று ஆண்டிற்கு) | ஒரு தொகுப்பு வரைபடத்திற கு | 100.00 |
| 9A | | கூர்ந்தாய்வு கட்டணம் | 1 சதுர மீட்டருக்கு (Floor area) | - | ஐந்து ஆண்டிற்கு | 2.00 |
| 9B | | இடம் அங்கீகாரம் | (அ) 2000 சதுர அடி வரை | 200 | ஐந்து ஆண்டிற்கு | 200 |
| | | | (ஆ) 2001 முதல் 4000 சதுர அடிவரை | 500 | ஐந்து வருடத்திற்கு | 500 |
| | | | (இ) 4000 சதுர அடிக்கு மேல் | 1000 | ஐந்து வருடத்திற்கு | 1000 |
| 10 | 99 | (1)கட்டட அனுமதி வரைபடம் உண்மை நகல் வழங்க | ஒரு தொகுப்பு வரைபடத்திற்க ு | 100.00 | ஒரு தொகுப்பு வரைபடத்திற் கு | 100.00 |
| | | (2)மனைப்பிரிவு அனுமதி வரைபடத்தின் உண்மைநகல் வழங்குவதற்கு | - | - | ஒரு தொகுப்பு வரைபடத்திற் கு | 100.00 |
| | | (3)நகர வரைபட நகல் வழங்க | ஒரு வரைபடத்திற்க ு | - | | 300.00 A2 Size 200.00 A3 size |
| | | (4)நகரளவை புலப்பட நகல் வழங்குவதற்கு | ஒரு புல எண் பகுதி காட்டும் வரை படத்திற்கு | - | | 100.00 |
| | | (5)நகரளவை புத்தக குறிப்பு நகல் வழங்க (A Register Copy) | ஒரு புல எண் பகுதி காட்டும் வரைபடத்திற்க ு | - | | 100.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | (6)நகர நில அளவை எல்லைகள் அளந்து காண்பிக்க | ஒவ்வொரு பக்க எல்கைக்கும் | 100.00 | | 100.00 |
| 11 | 99 | (7)கட்டட பட வரைவாளர் அனுமதி வழங்க, புதுப்பிக்க | ஒரு ஆண்டிற்கு | 500.00 | ஒரு ஆண்டிற்கு | 1000.00 |
| | | (8)கட்டட பட வரைவாளர் அனுமதி வழங்குவதற்கு முன் வைப்புத் தொகை | ஒரு முறை | 1000.00 | ஒரு முறை | 5000.00 |
| | | (9)தொலை தொடர்பு கோபுரங்களுக்கு அனுமதி வழங்குதல் | ஒரு முறை | - | இனம் ஒன்றிற்கு | 3000.00 |
| 12 | 208,210 | குடிசைகள் அமைக்க, சேர்த்து கட்டுவதற்கு | 10 சதுர மீட்டருக்கும் அதன் பாகத்திற்கும் | - | ஐந்து ஆண்டு காலத்திற்கு | 100.00 |
| 13 | | படப்பிடிப்புக்கு | பழைய கட்டணம் | பழைய வைப்புத தொகை | புதிய கட்டணம் ஒரு நாள் படப்பிடிப்பு நடத்த தொகை | புதிய வைப்புத் தொகை |
| | | நகராட்சிக்கு சொந்தமான சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையம் மற்றும் சொந்தமான இடங்கள் | - | - | 3000 | 3000 |
| 14 | நகர் ஊரமைப்பு சட்டம் 1971-பிரிவு 59-ன் கீழ் | <u>**அபிவிருத்திக் கட்டணம்**</u><br>1)குடியிருப்பு மனைக்கு<br>2)வணிக உபயோக மனைகள்<br>3) தொழிற்சாலை மனைகள்<br>4) இதர உபயோக மனைகள் | 1 ச.மீக்கு | <br>2.00<br>5.00<br>5.00<br>5.00 | | <br>2.00<br>5.00<br>10.00<br>10.00 |
| | | 1)குடியிருப்பு கட்டுமானம்<br>2)தொழிற்சாலை கட்டுமானம்<br>3)வணிக உபயோக கட்டுமானம்<br>4)வணிக உபயோக கட்டுமானம் | | 5.00<br>10.00<br>10.00<br>10.00 | | 5.00<br>10.00<br>20.00<br>20.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 5) இதர உபயோக கட்டுமானம் | | | | |

ந.க.எண்.811/2011/TPI

## தீர்மானம் எண்.2005 அங்கீகரிக்கப்பட்டன

### பொருள். எண்.3

குளச்சல் நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வந்த செல்வி கே.சாந்தி (த.ப.நீ) செய்யப்பட்டதை தொடர்ந்து பிழைப்பூதியம் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.910/17 நாள் 20.09.2018-ன் படி தீர்ப்பு வழஙகப்பட்டது. மேற்படி வழக்கிற்கு கட்டணமாக ரூ.10000/- வழங்க கேட்டு திரு.பி.ஆதிமூல பாண்டியன் வழக்கறிஞர் கேட்பு சமர்ப்பித்துள்ளார். மேற்படி வழக்கின் தீர்ப்பின் மீது சட்ட கருத்துரு திரு.AKபாஸ்கர பாண்டியன் அரசு சிறப்பு வழக்கறிஞர் மூலம் பெறப்பட்டமைக்கு கட்டணமாக தொகை ரூ.9500/- ன்னால் திருமதி.Rஹேமா (இ.நி.உ) வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வழக்கறிஞர் கட்டணமாக தொகை ரூ.10000/- மற்றும் சட்ட கருத்துரு பெற்றமைக்கு தொகை ரூ.9500/- வழங்கவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1572/2009/சி1

## தீர்மானம் எண்.2006 அங்கீகரிக்கப்பட்டது

### பொருள். எண்.4

இந்நகராட்சி அம்மா உணவகத்தில் அரிசி மற்றும் மளிகை பொருட்களை எடை போடுவதற்கு பயன்பாட்டில் இருந்த எடை மெஷின் பழுதடைந்து சரி செய்ய இயலாத நிலையில் இருந்த காரணத்தினால் அவசர அவசியம் கருதி 'Universal Scales' நாகர்கோவில் நிறுவனத்திலிருந்து புதிதாக எடை மெஷின் வாங்கிய வகையில் செலவு செய்யப்பட்ட ரூ.3700/- ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1117/2015/அ1

## தீர்மானம் எண்.2007 அங்கீகரிக்கப்பட்டது

### பொருள். எண்.5

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் மாவு அரைக்கும் இயந்திரம் பழுதடைந்துவிட்டது. மாவு அரைக்கும் இயந்திரம் சரி செய்த வகையில் ரூ.2900/- திரு.Mதமிழ்செல்வன் வருவாய் உதவியாளரால் செலவு செய்யப்பட்டது. மேற்படி தொகையை திரு.Mதமிழ்செல்வன் வருவாய் உதவியாளருக்கு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1117/2015/அ1

## தீர்மானம் எண்.2008 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள். எண்.6**

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு 2018 மார்ச் முதல் 2019 ஜனவரி முடிய நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யப்பட்ட தொகையும், உணவுகள் விற்பனை செய்யப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | வரவு விபரம் | செலவு விபரம் |
|---|---|---|
| 2018 மார்ச் | 85700 | 217783 |
| 2018 ஏப்ரல் | 81700 | 215065 |
| 2018 மே | 96000 | 214770 |
| 2018 ஜுன் | 78700 | 218900 |
| 2018 ஜுலை | 75300 | 217645 |
| 2018 ஆகஸ்ட் | 75300 | 217315 |
| 2018 செப்டம்பர் | 76000 | 211597 |
| 2018 அக்டோபர் | 77200 | 216429 |
| 2018 நவம்பர் | 77250 | 239881 |
| 2018 டிசம்பர் | 76900 | 224750 |
| 2019 ஜனவரி | 74900 | 227267 |

ந.க.எண்.1117/2015/அ1

## தீர்மானம் எண்.2009 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.7**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் Sump-ன் மேல் உள்ள மின் மீட்டரை (மின் இணைப்பு எண்.172002868) இடமாற்றம் செய்து வெள்ளிப்பிள்ளையார் கோவில் 200KVA ஜெனரேட்டர் அறையில் வைப்பதற்கு மதிப்பீட்டு கட்டணம் ரூ.885/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2379/2011/இ2

## தீர்மானம் எண்.2010 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான டோக்கன் அச்சடிப்பதற்கு உள்ளூர் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்பட்டியல் பின்வருமாறு

| வ.எண் | பெயர் | எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தாசன் அச்சகம் | 1 புக்<br>(1 முதல் 1000 நம்பர்)<br>1 புக் | ரூ.135 |
| 2 | கிறேஸ் அச்சகம் | ( 1 முதல் 1000 நம்பர்) | ரூ.150 |

மேற்காணும் இரண்டு விலைப்பட்டியலில் தாசன் அச்சகத்திற்கு விலை குறைவாக இருப்பதால் மேற்படி அச்சகத்திற்கு வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1117/2015/அ1

## தீர்மானம் எண்.2011 அங்கீகரிக்கப்பட்டது

### பொருள் எண்.9

குளச்சல் நகராட்சி முழுமைத்திட்டத்தின் (Master Plan) படி கடற்கரையில் இருந்து 500 மீட்டர் தூரத்திற்குட்பட்ட இடங்கள் CRZ II என வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதியில் கட்டிடங்கள் (குடியிருப்பு, வணிகம், தொழிற்சாலை உட்பட) கட்டுவதற்கு நகராட்சியில் இருந்து நேரிடையாக வரைபட அனுமதி வழங்கப்படுவது இல்லை. இந்நிலையில் Ministry of Environment, Forest and climate change Notification, New Delhi the 18th January 2019- ன் படி, CRZ II பகுதியில் 300 சதுர மீட்டர் வரையிலான குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுவதற்கு, கடற்கரை மேலாண்மை குழுமம் மற்றும் இதர அதிகார குழுவிடமிருந்து எந்த விதமான பரிந்துரையும் இன்றி நகராட்சியில் இருந்து நேரிடையாக வரைபட அனுமதி வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி Notification நகர்மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்.296/2019/TP1

## தீர்மானம் எண்.2012 அங்கீகரிக்கப்பட்டது

### பொருள் எண்.10

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு காம்பெக்டர் லாரி எண்.TN -75-L-2565-க்கு தகுதி சான்று பெறுவதற்கு கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவுத் தொகை ரூ.100000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**பணியின் விவரம்**

1. மின் இன்டிகேட்டர் லைட் மாட்டும் இடம் டிங்கரிங் செய்துஇரு இன்டிகேட்டர் பொருத்துதல்
2. இடது பின்புறம் ஹைட்ராலிக் ஜாக்கி பின் போடுதல்
3. மாடியில் உள்பக்கம் பிளாட் தகடு புதியது போடுதல்
4. முன் பாடை அடிப்பாகம் டிங்கரிங் செய்தல்
5. பிளீச்சிங் பவுடர் வைக்க கிரில் பாக்ஸ் மாட்டுதல்
6. முன் வலது டோர (விசாரி) சரி செய்தல்
7. பாடியில் பேச் ஒர்க் செய்தல்
8. ஹைட் லைட் ஒன்று புதிதாக பொருத்துதல் (இடது புறம்)
9. முன் இடதுபுற ஹெட்லைட் கவுன் புதிது பொருத்துதல்
10. முன் இடது புற இன்டிகேட்டர் லைட் புதிது பொருத்துதுல்
11. எலக்ட்ரீக்கல் செக்கப் செய்துஹாரன் சுவிட்ச் மாட்டுதல்
12. கிளட்ச் பிளேட், கவர் மாற்றி ஓவரானிங் செய்தல்

13. ஹைட்ராலிக் டியூப் பழுதடைந்ததை மாற்றி புதிது போடுதல்
14. ஹைட்ராலிக் ஆயில் 25 லிட்டர் விடுதல்
15. பணியாளர் இருக்கை சரி செய்தல்
16. வாகனம் முழு சர்வீஸ் செய்தல்
17. முழு பெயிண்டிங் செய்தல் மற்றும் சில இதர பணிகள்

ந.க.எண்.1841/2013/எச்1

## தீர்மானம் எண்.2013 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.11**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களில் அடிக்கடி ஏற்படும் பழுதுகள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி உடனடியாக சரி செய்ய வேண்டியுள்ளதால் அத்தியாவசிய செலவு தொகை ரூ.50000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1841/2013/எச்1

## தீர்மானம் எண்.2014 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.12**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பிறப்பு இறப்பு பதிவு செய்த படிவங்கள் பாதுகாப்பாக பராமரிக்க அட்டை (Binding) போடப்பட்ட வகையில் ரூ.1800/- வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.293/2019/எச்1

## தீர்மானம் எண்.2015 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணாசிலை அருகில் அமைந்துள்ள கட்டணம் கழிப்பிடம் 2018-19 ஆம் ஆண்டிற்கு திரு.அய்யப்பன் என்பவரால் ரூ.8000/-க்கு குத்தகைக்கு எடுக்கப்பட்டது. தற்போது கட்டணம் கழிப்பிடம் உரிமம் காலம் 31.03.2019 டன் முடிவடைவதால் கட்டணம் கழிப்பிடத்திற்கு 13.02.2019 ஏலம் விடப்பட்டது. ஏலத்தில் எவரும் முன்வைப்புத்தொகை செலுத்தி கலந்து கொள்ளவில்லை. தற்சமயம் திரு.அய்யப்பன் என்பவர் தாமாக முன்வந்து 2018-19-ஆம் ஆண்டிற்குரிய குத்தகை உரிமத்தொகையில் 5% உயர்வு செய்து (ரூ.8000+400) ரூ. 8400/-ம் மற்றும் சேவைவரி ரூ.1512/-ம் செலுத்த முன்வந்துள்ளதால் நிர்வாக நலனை கருதி மேற்படி நபருக்கு 2019-2020-ம் ஆண்டிற்கு கட்டணம் கழிப்பிடம் உரிமம் வழங்குவதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.11062/2015/அ1

## தீர்மானம் எண்.2016 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.14**

**நகராட்சி** நிர்வாக ஆணையரின் அறிவுரையின் படி, 12.10.2017 அன்று சங்கரன் கோவில் நகராட்சியில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் ஆய்வில், நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தவிர்க்கும் பொருட்டு, Bucket Chlorination முறையை கைவிட்டு, Liquid Chlorination with Disinfection system அமைக்க தெரிவிக்கப்பட்டதால், நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக அலுவலக வளாகம் (உட்பகுதி மற்றும் வெளிப்பகுதி) பேருந்து நிலையம், மாதா காலனி, கே.எஸ்.எஸ்.எஸ் காலனி, வி.கே.பி பொட்டல் மற்றும் பீச் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆகிய 7 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குளோரின் கலப்பதற்காக Chlorination Plant அமைக்கும் பணியினை, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி 15-ன் கீழ் மேற்கொண்டு அதற்கான செலவினம் ரூ.5,09,642/-ஐ குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1937/2017/இ2

## தீர்மானம் எண்.2017 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை, காணிக்கை மாதா கோயில் அருகில், கொட்டில்பாடு மற்றும் சிங்காரவேலன் காலனி பகுதிகளில் குடிநீர் வினியோகத்திற்காக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில், நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு நெல்லிக்குப்பம் நகராட்சி மாதிரியில் Chlorination System அமைக்கும் பணியினை, பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட பிரிவு 15-ன் கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.60,000/- ஐ குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து வழங்கயுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1931/2017/இ2

## தீர்மானம் எண்.2018 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.16**

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கான 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் Chlorination Plant அமைக்கப்பட்டுள்ள 7 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கும், நெல்லிகுப்பம் நகராட்சி மாதிரியில் Chlorination System அமைக்கப்பட்டுள்ள 4 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கும் மின் இணைப்பு பணிகளை ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில், பணியின் அவசர அவசியம் கருதி, நகராட்சி சட்ட விதி 15-ன் கீழ், மேற்கொண்டு, அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1932/2017/இ2

## தீர்மானம் எண்.2019 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.17**

இந்நகராட்சி திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை தினத்தந்தி நாளிதழின் தொழில் மலர் 2017-ல் வெளியிட்ட வகையில் ரூ.9841/- ஐ வழங்க கேட்டு தினத்தந்தி அலுவலகத்திலிருந்து பட்டியல் எண். NGL 1718-0006437 நாள் 27.09.2017 வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிதருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2020 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.18**

இந்நகராட்சியில், தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் : 2018-19-ன் கீழ், ரூ.31.60 இலட்சம் மதிப்பீட்டில் 12 எண்ணம் மின்கலத்தில் இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicles) வினியோகம் செய்தல் பணிக்கு 13.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அவற்றின் தொழில் நுட்ப உறை திறக்கப்பட்டு Bid Evaluation செய்யப்பட்டதில், மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி பெற்றதை தொடர்ந்து 25.02.2019 அன்று விலைப்புள்ளி உறை (Price bid) திறக்கப்பட்டது. அவற்றின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s Neptune Automation,<br>254, Aurnachala Gounder Thottam,<br>Veerapanpalayam, Erode | மதிப்பீட்டை விட 10.05% குறைவு |
| 2 | M/s. Priyam Industries & Engineering<br>628, Surya Complex, 2nd Floor<br>Anna salai, Chennai | மதிப்பீட்டை விட 0.55% குறைவு |
| 3 | M/s. Arun Indian Motors,<br>No.5, Gandhi Road, Salem | மதிப்பீட்டை விட 0.27% குறைவு |

**மேற்காணும் மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில்,** M/s Neptune Automation, Erode நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 10.05% குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்று Letter of Acceptance (LOA) வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566-4/2018/இ1

**தீர்மானம் எண்.2021 அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண்.19

குளச்சல் நகராட்சியில் ஒப்பந்ததாரர் ஒப்பந்த பணிகள் மேற்கொண்ட வகையில் செலுத்தப்பட்ட EMD மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு தொகைகள் காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படியான ஒப்பந்ததாரர்களுக்கு வைப்பு தொகை திரும்ப வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

முன்வைப்பு தொகை பிடித்தம் செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள்

| வ. எண் | பெயர் | விவரம் தொகை |
|---|---|---|
| 1 | திரு.ஜாண் ரக்ஸிலின் ஜோஸ் | ரூ.40134/- |
| 2 | திரு.சி.சந்திரசேகர் | ரூ.17100 |
| 3 | திரு.எ.ஜோஸ்லின்கோல்டு லிவிங்ஸ்டன் | ரூ.24400/- |
| 4 | இசக்கி முத்து | ரூ.15263/- |

ந.க.எண்.1104/2016/பி1

**தீர்மானம் எண்.2022 அங்கீகரிக்கப்பட்டது**